வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 07 15.06.2026 திங்கட்கிழமை இதழ் : 160 பக்கங்கள் : 08

### வெளியேற்றப்பட்டு இன்றுடன் 37 ஆண்டுகள்

# யாழ். மாவட்ட செயலகம் முன் வலி.வடக்கு மக்கள் போராட்டம்!

### பலாலி சந்தியிலும் ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஜூன். 15

வலி.வடக்குப் பகுதியில் இருந்து மக்கள் வெளியேற்றப்பட்டு, 37 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில், தம்மை மீண்டும் சொந்த இடங்களில் குடியேற்றக் கோரி இன்று திங்கள்கிழமை காலை யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக மாபெரும் போராட்டம் ஒன்றை அப்பகுதி மக்கள் முன்னெடுக்கவுள்ளனர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலி.வடக்கு பிரதேச மக்கள் அப்பகுதிகளில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக வெளியேற்றப்பட்டனர்.


இந்நிலையில் இன்று திங்கள்கிழமை ஜூன் 15ஆம் திகதி, அப்பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டு 37 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

யுத்தம் நிறைவடைந்து 17ஆண்டுகள் நிறைவடைந்த நிலையிலும் அப்பகுதி மக்கள் இன்னமும் மீள்குடியேற அனுமதிக்காது, அப்பகுதி மக்களின் காணிகளில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

இந்நிலையில் தமது காணிகளில் இருந்து இராணுவத்தினரை வெளியேற்றி, தம்மை தமது சொந்த இடங்களில் மீள்குடியேற அனுமதிக்கவேண்டும் என இன்று யாழ். மாவட்ட செயலகம் முன்பாக போராட்டத்தை முன்னெடுக்க உள்ளதாக மயிலிட்டி மீள்குடியேற்ற அபிவிருத்திக் குழு அறிவித்துள்ளது.

தமது போராட்டத்துக்கு கட்சி பேதங்கள் இன்றி, அனைத்து தரப்பினரும் ஆதரவு தெரிவித்து போராட்டத்தில் கலந்து கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதேவேளை, பலாலி சந்திப் பகுதியிலும் இன்று திங்கள்கிழமை காலை 08.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையில் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)



## செம்மணி புதைகுழியில் நேற்றும் இரு என்புக்கூடுகள் அடையாளம்!

யாழ்ப்பாணம், ஜூன். 15

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று ஒரு குழந்தையின் என்புக்கூடு, நான்கு சிறுவர்களின் என்புக்கூடுகள் உட்பட 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் இரண்டு என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 24ஆம் நாள் அகழ்வு பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றன.

இதன்போது ஏற்கனவே அடையாளம்

07

## கோப்பாய் பொலிஸார் வைத்திருந்த காணிகள், வீடுகள் முற்றாக விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன். 15

கோப்பாய் பொலிஸ் நிலையம் புதிய இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டதை அடுத்து முன்னர் பொலிஸ் நிலையம் இயங்கிய பொது மக்களின் காணிகள் முற்றாக விடுவிக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பொலிஸ் நிலையம் கடந்த 1995ஆம் ஆண்டு முதல் இராச பாதையில் தனியாருக்கு சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை உள்ளடக்கி இயங்கி வந்தது

இந்நிலையில் கடந்த 2019ஆம் ஆண்டு கால பகுதியில் 07 காணி மற்றும் வீட்டு உரிமையாளர்கள் யாழ். மாவட்ட நீதிமன்றில் தமது காணிகள் வீடுகளை விட்டு பொலிஸார் வெளியறவேண்டும் என வழக்கு தொடர்ந்தனர்.

07



## ஈஸ்டர் தாக்குதல் ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பியுங்கள்!

### அமைச்சர் நளிந்த கோரிக்கை

கொழும்பு, ஜூன். 15

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் குறித்து ஆதாரங்கள் இருப்பதாகக் கூறுபவர்கள், வெறுமனே ஊடகங்களுக்கு கருத்துக்களை வழங்கி பகிரங்கக் குற்றச்சாட்டுகளை சுமத்துவதை விடுத்து, தங்களது சான்றுகளை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும் என்று சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மதுகம மற்றும் அகலவத்தை பகுதிகளில் "ஐ-ரோட்"

07

## ரெலோவின் தேசிய மாநாட்டை புறக்கணித்த முக்கியஸ்தர்கள்!

வவுனியா, ஜூன். 15

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தமிழீழ விடுதலை இயக்கத்தின் 12ஆவது தேசிய மாநாட்டில், கட்சியின்

07

## செம்மணியைப் பார்வையிடவுள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள்!

### ஜூலை மாத முற்பகுதியில் வருகை

கொழும்பு, ஜூன். 15

செம்மணி மனிதப்புதைகுழியில் இதுவரை 355 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் ஜூலை மாத முற்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் செம்மணி மனிதப் புதைகுழியைச் பார்வையிடவுள்ளனர்.

செம்மணி மனிதப்புதைகுழியில் இதுவரை 355 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டிருப்பதுடன், அவற்றில் 341 எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறானதொரு

07

## பயங்கரவாதத் தடுப்புக்கான அரச சட்டம் இரு மாதங்களில்!

### அமைச்சர் விஜித ஹேரத் தகவல்



கொழும்பு, ஜூன். 15

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு மாற்றாகக் கொண்டு வரப்படும் சட்டம், இரண்டு மாதங்களுக்குள் நிறைவேற்றப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் மற்றும்

07

## கோப்பாய் பொலிஸ் புதிய கட்டடத்தை திறந்து வைத்தார் அமைச்சர் விஜேபால



யாழ்ப்பாணம், ஜூன். 15

கோப்பாய் பொலிஸ் நிலைய புதிய கட்டடம் நேற்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்

07

## சிறுபான்மை கட்சிகள் இணைந்து ஜனாதிபதியை சந்திக்க முயற்சி!

### அரசு நிறைவேற்றாத வாக்குறுதிகள் குறித்து மகஜர் கையளிக்கவும் திட்டம்

கொழும்பு, ஜூன். 15

தமிழ் மொழி பேசுகின்ற சிறுபான்மை தேசிய இனங்களை பிரதிநிதித்துவம் செய்கின்ற அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவைச் சந்திப்பதற்கு முயற்சிகளை எடுத்துள்ளன.

அதற்கமைவாக, இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழ்

07

## ரெலோ தலைவராக மீண்டும் செல்வம்!

### தேசிய மாநாட்டில் தெரிவு



வவுனியா, ஜூன். 15

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார்.

ரெலோவின் 12ஆவது தேசிய மாநாடு

07

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இ.போ.ச. சாரதியுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட தனியார் சாரதி இடைநீக்கம்

கிளிநொச்சி, ஜூன். 15

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் இலங்கை போக்குவரத்துச் சபையின் (இ.போ.ச.) சாரதியுடன் முரண்பாட்டில் ஈடுபட்ட தனியார் பஸ் சாரதி ஒருவருக்கு இரண்டு நாள்கள் பணி இடைநிறுத்தம் செய்து வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் சூ.விமலேஸ்வரன் உத்தரவிட்டுள்ளார்.

கிளிநொச்சி பஸ் நிலையத்தில் அண்மையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. விசுவமடுவிலிருந்து வவுனியா நோக்கிப் பயணிக்கும் தனியார் பஸ்ஸின் சாரதியே இவ்வாறு முரண்பாட்டில் ஈடுபட்டுள்ளார். இது தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக அதிகார சபையால் துரித நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கடந்த விசேட விசாரணையொன்று முன்னெடுக்கப்பட்டது. இதன்போது பஸ்ஸின் சாரதியாகக் கடமையாற்றியவர் முரண்பாட்டில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து, குறித்த சாரதிக்கு இரு தினங்கள் சேவையில் ஈடுபடுவதற்குப் பணி இடைநிறுத்தம் வழங்கி அதிகார சபையின் தலைவரால் உத்தரவிடப்பட்டுள்ளது.

அத்துடன், பஸ்ஸின் உரிமையாளருக்கு எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றால் வழித்தட அனுமதிப் பத்திரம் இடைநிறுத்தப்படும் என்ற எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

(அ)

## நயினாதீவு அம்மனின் கொடியேற்றம் இன்று!

யாழ்ப்பாணம், ஜூன். 15

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவ கொடியேற்றம் இன்று திங்கட்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து மகோற்சவ திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் 28ஆம் திகதி காலை தேர் உற்சவமும், மறுநாள் 29ஆம் திகதி காலை தீர்த்த திருவிழா இடம்பெற்று மாலை கொடியிறக்கம் இடம்பெறும்

மகோற்சவ காலத்தில் பக்தர்களின் பாதுகாப்பிற்கு தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதுடன் , மக்களுக்கான சேவைகள் உள்ளிட்டவற்றுக்கு சாரணர்கள் , சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியினர் உள்ளிட்டவர்கள் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

அத்துடன் மகோற்சவ காலத்தில் 42 படகுகள் சேவையில் ஈடுபடவுள்ளதுடன் , விசேட போக்குவரத்து சேவைகளில் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பஸ்கள் மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடவுள்ளன.

அத்துடன் பக்தர்களுக்காக குடிதண்ணீர் தேவைப்பாடுகள், வைத்திய சேவை, சுகாதாரம், மின்சாரத் தேவை, அம்புலன்ஸ் சேவை என்பவையும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. (அ)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முதலாவது பன்னாட்டு தமிழிசை மாநாடு!




யாழ்ப்பாணம், ஜூன். 15

முதலாவது பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாட்டின் இரண்டாவது நாள் நிகழ்வானது நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்றது.

நேற்றைய நிகழ்வின்போது மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இசைத் துறையின் வரலாற்றில் ஒரு மைக்கல்லாக இந்த முதலாவது பன்னாட்டு தமிழிசை ஆய்வு மாநாடு நடத்தப்படுகிறது.

இசைத்துறை தலைவர் கலாநிதி சி. சூரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக முதுநிலைப் பேராசிரியரும் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தருமான தி. வேல்நம்பியும், மாநாட்டு முதன்மைக் கருத்துரைஞராக முனைவர் அரிமளம் பத்மநாபனும் கலந்து சிறப்பித்ததுடன் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள் என பலரும் இதில் கலந்துகொண்டனர்.

(அ-05)

# பொலிஸார் மக்களின் நம்பிக்கையை வெல்லும் வகையில் செயற்படவேண்டும்!

### வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 15

பொலிஸார் மக்களின் நம்பிக்கையை வெல்லும் வகையில் செயலாற்ற வேண்டும் எனவும், பொலிஸ் திணைக்களத்துடன் மக்களும் இணைந்து பயணிக்கும்போதே குற்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

1966ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, கடந்த 60 ஆண்டுகளாகத் தற்காலிக இடங்களில் இயங்கிவந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கான புதிய நிரந்தரக் கட்டடம் நேற்று ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நான் மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் பொலிஸார் தொடர்பில் பொது மக்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடுகளைப் பெற்றிருக்கின்றேன்.

குறிப்பாக, பொலிஸ் நிலையங்களில் தமது முறைப்பாடுகள் ஏற்கப்படுவதில்லை எனவும், தமக்குத் தீங்கிழைத்த குற்றவாளிகளுடன் பொலிஸார் நட்பாகப் பழகுவதாகவும் மக்கள் முறையிட்டிருந்தனர்.

ஆனால், இன்று அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வழங்கிவரும் உறுதியான தலைமைத்துவமே இந்த மாற்றத்துக்குக் காரணமாகும். இருப்பினும், இத்துறையில் இன்னமும் பல மாற்றங்கள் ஏற்பட வேண்டியுள்ளது.

வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் அதிகரித்திருந்த வாள்வெட்டு உள்ளிட்ட வன்முறைக் கலாசாரம் இன்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொலிஸார் தமது சேவைகளைத் திறம்பட முன்னெடுப்பதற்குப் பௌதீக வளங்கள் மிகவும் அவசியமானவை. அந்த வகையில், நீண்டகாலத்தின் பின் இன்று அவர்களுக்குத் தேவையான நிரந்தரக் கட்டடம் கிடைத்துள்ளது. இதன் மூலம் அவர்கள் மேலும் சிறப்பான சேவைகளை வழங்குவார்கள் என நாம் எதிர்பார்க்கலாம்.

கிளிநொச்சியில் இடம்பெற்றுவந்த சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் கடத்தல்களால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன.

இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுப்ப தற்காக நானும், அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப் புக்குழுத் தலைவருமான சந்திர சேகரும் பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்திருந்தோம்.

அதன்போது, "கடந்த காலங்களில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் காப்பாற்றுவதற்காகவே அரசியல்வாதிகள் எம்மைத் தேடி வருவார்கள்.

ஆனால், நீங்களோ அவர்களுக்கு எதிரா கக் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரி வந்துள்ளீர்கள்" என அவர் ஆச்சரியத்துடன் குறிப்பிட்டார்.

அதுதான் உண்மை. சட்டவிரோதச் செயற்பாடுகளின் பின்னால் இன்றைய அரசாங்கம் ஒருபோதும் நிற்காது. இத்தகைய குற்றங்களை ஒழிப்பதற்குப் பொதுமக்களாகிய நீங்களும் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்-என்றார்.

(அ)

## அர்ச்சுனா எம்.பி. ஒரு 'ஜோக்கர்'!



யாழ்ப்பாணம், ஜூன். 15

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா ஒரு ஜோக்கர் எனவும், அவரை பற்றி கதைக்க வேண்டியதில்லை எனவும், தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

நேற்று, யாழ்ப்பாணம் கோப்பாய் பொலிஸ் நிலையத் திறப்பு விழாவில் பங்கேற்ற வேளை, மகிந்த ராஜபக்ஷவை பாராட்டும் நிகழ்வில் அர்ச்சுனா இராமநாதன் பங்கேற்றமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கையில், இவ்வாறு குறிப்பிட்டார். (அ)

## கிண்ணியாவில் டித்வா புயலினால் ஏற்பட்ட சேதங்களுக்காக ரூ.7.5 மில்லியன் நிதியுதவி

கிண்ணியா, ஜூன். 15

டித்வா புயலால் வீடுகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியுதவிகள் திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட 31 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

7.5 மில்லியன் ரூபாய் நிதி காசோலைகளாக கையளிக்கப்பட்டது.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம்.கனி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு காசோலைகளை வழங்கினார்.

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளரும், தேசிய மக்கள் சக்தியின் கிண்ணியா பிரதேச அபிவிருத்தி குழு இணைப்பாளருமான எம்.ஈ.எம்.ராபிக், வெளிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் அஷ்ரப் இம்ரான் ஆகியோர் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu
15.06.2026 திங்கட்கிழமை
பராபவ வருடம், ஆனி 01

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## மீண்டும் ஆட்சிக்கு வருவது குறித்து கனவு காணும் மகிந்த

மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக தனது இரண்டாவது பதவிக் காலத்தின் முடிவில் அரசியலில் இருந்து ஓய்வுபெற்றிருக்க வேண்டும் என்று 2022 "அறகலய" மக்கள் கிளர்ச்சி நாட்களில் அவரது தமையனார் சமல் ராஜபக்ச பாராளுமன்றத்தில் கூறினார்.

கொழும்பு கோட்டை காலிமுகத் திடலில் "கோட்டா கோ கம" போராட்டக்காரர்களை தாக்குவதற்கு தனது ஆதரவாளர்களை அலரிமாளிகையில் இருந்து கட்டவிழ்த்து விட்ட அன்றைய பிரதமர் மகிந்த நாடுபூராவும் பரவிய அரசாங்க எதிர்ப்பு வன்முறைக்கு மத்தியில் பதவி விலகியதற்கு பின்னரே தமையனார் அவ்வாறு கூறினார். ஆனால், அது மகிந்தவுக்கு நினைவிருக்கிறதோ தெரியவில்லை.

தனது பதவிக் காலத்தில் விடுதலை புலிகளை போரில் தோற்கடித்தமைக்காக காலங்காலமாக தாங்களே ஆட்சியதிகாரத்தில் இருப்பதற்கு உரித்துடையவர்கள் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்த மகிந்தவுக்கு தங்களது ஆட்சியை மக்கள் வீதிகளில் இறங்கிக் கிளர்ச்சிசெய்து தூக்கியெறிந்ததை இன்றுவரை ஜிரணித்துக் கொள்ள முடியவில்லை. மீண்டும் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற வன்மம் அவருக்கு இருக்கிறது என்பதை அவர் இடைக்கிடை வெளியிடும் கருத்துக்கள் தெளிவாக வெளிக்காட்டுகின்றன.

இந்த வருடம் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான திட்டம் தனது தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிடம் இருக்கிறது என்று சிங்கள - தமிழ் புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு பிறகு மகிந்த கூறினார். ஆனால், அதற்குப் பிறகு அந்த திட்டம் குறித்து அவர் பேசியதாக செய்தி எதுவும் வந்ததாக இல்லை. இப்போது அவர் மக்கள் தங்களுடன் மீண்டும் ஒன்றிணைந்து விட்டதாகவும் அதனால் மீண்டும் ஆட்சியைத் தங்களிடம் தந்தால் சிறந்த முறையில் நாட்டை நிருவகிக்க முடியும் என்றும் கூறுகிறார்.

ராஜபக்ச குடும்பத்தின் அதிவிசுவாசியான பாராளுமன்ற உறுப்பினர் றோஹித அபேகுணவர்தன மகிந்தவை கௌரவிப்பதற்காக களுத்துறையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தார். அதில் உரையாற்றிய வேளையிலேயே மகிந்த மீண்டும் தங்களிடம் ஆட்சியைத் தருமாறு கேட்டுக் கொண்டார். "நாட்டு மக்கள் பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கிறார்கள். ஒரு வேளை உணவைக் கூட முழுமையாகப் பெறக்கூடிய நிலையில் மக்கள் இருக்கிறார்களா என்பது சந்தேகமே. ஒரு அரசியல் கட்சி என்ற ரீதியில் நாங்கள் பலமாகவே இருக்கிறோம். சிறந்த முறையில் நாட்டை நிருவகிக்க எம்மால் முடியும்" என்று அவர் அங்கு கூறினார்.

மக்கள் தங்களுடன் மீண்டும் ஒன்றிணைந்திருப்பதாக எதை அடிப்படையாக வைத்து முன்னாள் ஜனாதிபதி கூறுகிறார் என்று தெரியவில்லை. தற்போது தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் மக்கள் பெரும் பொருளாதார இடர்பாடுகளுக்கு முகங்கொடுக்கிறார்கள் என்று கவலைப்படும் மகிந்தவும் அவரது இரு சகோதரர்களும் அவர்களுடன் பணியாற்றிய உயர் மட்ட அதிகாரிகளுமே 2022 ஆம் ஆண்டில் இலங்கை வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்த முடியாமல் வங்குரோத்து நிலையை அடைந்ததற்கு பொறுப்பு என்று இரண்டரை வருடங்களுக்கு முன்னர் நாட்டின் அதியுயர் நீதிமன்றம் கூறிய தீர்ப்பை மக்கள் மறந்து விட வேண்டும் என்று ராஜபக்சாக்கள் எதிர்பார்க்கிறார்களா?

சுதந்திர இலங்கையில் பதவியில் இருந்த அரசாங்கங்களில் ராஜபக்ச ஆட்சிகளிலேயே ஊழல் முறைகேடுகள், குடும்ப அரசியல் ஆதிக்கம், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் சட்டத்தின் ஆட்சியின் சீர்குலைவு என்று ஆட்சிமுறையின் கெடுதியான சகல போக்குகளும் படுமோசமாகத் தலை விரித்தாடியதை மக்கள் மறந்து தங்களுடன் ஒன்றிணைய வேண்டும் என்று மகிந்த எதிர்பார்கின்றாரா?

தெற்காசியாவில் மக்கள் கிளர்ச்சியினால் முதன் முதலாக பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டது தங்களது ஆட்சியே என்ற " வரலாற்று அபகீர்த்தியை" மறந்து நாட்டு மக்கள் மீண்டும் தங்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பார்கள் என்று மகிந்த எதிர்பார்க்கிறார் என்றால் அரசியலில் அவரின் அனுபவம் கேள்விக்குள்ளாகிறது.

"அறகலய" கிளர்ச்சிக்கு பின்னர் நாட்டுமக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அரசியல் சிந்தனை மாற்றத்தையும் அதன் விளைவான ஆட்சி. மாற்றத்தையும் ஒரு "அரசியல் இடறல்" என்று என்று மகிந்த நினைக்கிறார் என்றால், அவர் பெருந்தவறைச் செய்தவராகிறார். மகிந்தவுக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கும் ஆட்சியதிகாரத்தில் நீண்டகாலமாக இல்லாமல் இருப்பது அசௌகரியமானதாக இருக்கலாம், ஆனால், மக்கள் மீண்டும் தவறான ஒரு ஆட்சியின் விளைவான அவலத்தை சந்திக்கத் தயாராயில்லை.

# எல்-நினோ சவால்களை எதிர்கொள்ள ஜனாதிபதி செயலணியை நிறுவுங்கள்!

### அரசுக்கு சஜித் பிரேமதாஸ யோசனை

*கொழும்பு, ஜூன். 15*

நாட்டில் ஏற்படக்கூடிய எல்-நினோ மற்றும் லா-நினா காலநிலை மாற்ற சவால்களுக்கு முகம் கொடுப்பதற்காக, விரைவான ஜனாதிபதி செயலணியொன்றை நிறுவுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யோசனை முன் வைத்துள்ளார்.

இலங்கைக் காலநிலை பற்றிய பாராளுமன்ற ஒன்றியக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர்,

"சர்வதேச கடல் மற்றும் வளிமண்டல நிர்வாக அமைப்பின் கணிப்புகளின்படி, கடல் நீரின் மேற்பரப்பு வெப்பநிலை வழக்கத்தை விட அதிகமாக உயர்வதால் "சூப்பர் எல்-நினோ" நிலைமை ஏற்படுவதற்கு 63 வீத சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இதன் காரணமாகக் கடுமையான வறட்சி அல்லது அதிக மழைப்பொழிவு போன்ற தீவிர காலநிலை மாற்றங்களை நாடு எதிர்கொள்ள நேரிடலாம்."

கடந்த ஏப்ரல் 7ஆம் திகதியே காலநிலை மாற்றம் பற்றிய பாராளுமன்ற ஒன்றியத்தில் அரச நிறுவனங்களின் நிபுணர்களை அழைத்து இது குறித்து முதன்முதலாகத் தாம் கலந்துரையாடியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தக் காலநிலை மாற்றங்கள் காரணமாக விவசாயம், நீர் முகாமைத்துவம் மற்றும் வனவிலங்கு-மனித மோதல்கள் அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து ஏற்படும் "லா-நினா" நிலைமையால் எதிர்பாராத கன மழை பெய்து மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும், சுற்றுச்சூழலுக்கும் கடும் அச்சுறுத்தல் ஏற்படலாம்



என நிபுணர்கள் எச்சரிப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், நீர் தட்டுப்பாடு அதிகரிப்பதன் மூலம் நாட்டின் மின் உற்பத்தியும் பாதிக்கப்படக்கூடிய சூழல் உருவாகலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

எனவே, இந்த அபாயகரமான சூழ்நிலையை எதிர்கொள்ள பிரத்தியேகமான ஜனாதிபதி செயலணியொன்று அமைக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# உகண்டா பணம் எங்கே?

### அரசிடம் வசந்த முதலிகே கேள்வி

*கொழும்பு, ஜூன். 15*

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் உகண்டாவில் பதுக்கி வைத்ததாகக் கூறப்பட்ட நிதிகளை மீட்டெடுத்து நாட்டை வளப்படுத்துவோம் என தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தெரிவித்தது. ஆனால் இன்று அவ்வாறான எந்த மாற்றமும் இடம்பெறவி ல்லை என மக்கள் போராட்ட முன்னணியின் செயற்பாட்டாளர் வசந்த முதலிகே தெரிவித் துள்ளார்.



கொழும்பு, மஹரகம நகரில் மக்கள் போராட்ட முன்னணியின் ஏற்பாட்டில் வாழ் க்கைச் சுமையை தாங்க முடியவில்லை. அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை உடன டியாகக் குறைக்க வேண்டும் என்ற கோசங் களை முன்வைத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண் டவாறு குறிப்பிட்டார். (அ)

**எல் நினோ தாக்கம் தீவிரம்**

# ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் கடும் மழை, வெள்ள அபாயநிலை

*கொழும்பு, ஜூன். 15*

இலங்கையைப் பாதித்துள்ள 'எல் நினோ' காலநிலை தாக்கம் காரணமாக, எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நாட்டின் சில பகுதிகளில் மழைவீழ்ச்சி அதிகரித்து வெள்ளப்பெருக்கு அபாயம் ஏற்படக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் கணிப்புப் பிரிவின் பணிப்பாளர் அஜித் விஜேமான்ன தெரிவித்துள்ளார்.

தற்போது பலவீனமான மட்டத்தில் காணப்படும் எல் நினோ நிலைமை, எதிர்வரும் டிசெம்பர், ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் மேலும் வலுப்பெறுவதற்கான சாத்தியக்கூறு 60 வீதத்திற்கும் அதிகமாக உள்ளதாக சர்வதேச சர்வதேச நோவா மையம் அறிவித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த காலநிலை மாற்றத்தின் தாக்கத்தால் ஜூலை, ஒகஸ்ட் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் நாட்டில் மழைவீழ்ச்சி குறையக்கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும், குறிப்பாக ஒகஸ்ட் மாதத்தில் வெப்பநிலை அதிகரிக்கும் வாய்ப்பு காணப்படுவதுடன், தற்போதைய அறிகுறிகளின்படி செப்ரெம்பர் மாதத்திலும் மழைப்பொழிவு குறைவாக இருக்கக்கூடும் என அவர் தெரிவித்தார்.

எனினும், பசிபிக் பெருங்கடல் பகுதியில் தைபொன் போன்ற சூறாவளிகள் உருவாகும் பட்சத்தில் தற்போதைய நிலைமையில் மாற்றம் ஏற்படக்கூடும் என்றும், அதன் காரணமாக தென்மேற்கு பருவக்காற்று சுறுசுறுப்படைந்து நாட்டின் சில பகுதிகளுக்கு கூடுதல் மழை கிடைக்க வாய்ப்புள்ளதாகவும் அஜித் விஜேமான்ன சுட்டிக்காட்டினார்.

காலநிலை மாற்றங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை கருத்தில் கொண்டு, விவசாயிகள், நீர்வள முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே முடிப்பது நல்லது. அவசர முடிவுகளை தவிர்க்கப் பாருங்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். உறவினர் நண்பர்களில் சிலர் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். முன்னேறும் நாள்.

**கடகம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பிள்ளைகளின் பொறுப்புணர்வுகளை பாராட்டுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். மதிப்புக் கூடும் நாள்.

**சிம்மம்**
சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். சாதிக்கும் நாள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். உறவினர்களால் மதிக்கப்படுவீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களை கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். பிள்ளைகளிடம் கோபத்தை காட்டாதீர்கள். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**விருச்சிகம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**தனுசு**
சமயோசிதமாக சாதுர்யமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். உறவினர் நண்பர்கள் உங்களிடம் முக்கிய விஷயங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். அமோகமான நாள்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும். நட்பு வட்டம் விரியும்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளிவட்டார தொடர்புகள் அதிகரிக்கும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும்.

# கரவெட்டி வளர்மதி மழலைகள் கல்வி பூங்காவில் சிறார் சந்தை

யாழ்ப்பாணம், ஜூன். 14

கரவெட்டி கிழக்கு வளர்மதி மழலைகள் கல்வி பூங்கா முன்பள்ளியின் "சிறார் சந்தை" நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

முன்பள்ளிச் சிறார்களின் சந்தைப்படுத்தல் ஆற்றலையும், கையாளுமைத் திறனையும் ஊக்குவிக்கும் நோக்குடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வை, கரவெட்டி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் ஆனந்தகிருஷ்ணன் நாடாவை வெட்டி அதிகாரப் பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் கலவன் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டு சிறுவர்களின் கடைகளுக்குச் சென்று பொருள்களைக் கொள்வனவு செய்து அவர்களை உற்சாகப்படுத்தினர் மேலும் இப்பகுதி அரச உத்தியோகத்தர்களான சசிகாந்தன் (கிராம அலுவலர்) மற்றும் திருமதி. பிரியா (பொருளாதார உத்தியோகத்தர்) உள்ளிட்ட ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.



அவர்கள் சிறார்களின் கடைகளில் விற்பனைக்கு வைக்கப் பட்டிருந்த பொருள்களை இன்முகத்தோடு வாங்கி, குட்டி வியாபாரிகளான மழலைகளைப் பாராட்டி மகிழ்வித்தனர். (அ)

# மயிலிட்டி மக்கள் முன்னெடுக்கும் போராட்டத்துக்குப் பூரண ஆதரவு

## அனைவரையும் கலந்து கொள்ளுமாறு காணி உரிமைக்கான மக்கள் இயக்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன். 15

போர் முடிந்து 16 ஆண்டுகள் கடந்த நிலையிலும் மக்களின் காணிகள் 36 ஆண்டுகளுக்கு மேலாக விடுவிக்கப்படாத நிலையில் மயிலிட்டி மக்கள் இன்று யாழ். மாவட்ட செயலகம் முன்பாக மக்கள் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர். இதற்கு காணியுரிமைக்கான மக்கள் இயக்கம் பூரண ஆதரவு வழங்கவுள்ளதாகவும் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் காணி உரிமைக்கான மக்கள் இயக்கத்தின் தலைவர் இரத்தினசிங்கம் முரளிதரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 15ஃ 6 ஃ1990 அன்று மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், புலம்பெயர்ந்தும் வசித்து வருகின்ற மயிலிட்டி மக்கள் தமது சொந்த காணிகளில் வாழ முடியாது துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள்.

வயாவிளான் பகுதியில் மக்களுடைய காணிக்குள் இப்போதும் பாரிய இராணுவ மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டு கொண்டிருக்கின்றது.

யுத்தம் நிறைவடைந்து 17 வருடங்கள் ஆகின்றன. இந்த நிலையிலும் மக்களுடைய காணிகளை விடுவிப்பதற்குரிய நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. இப்போது ஆட்சியிலிருக்கின்ற அரசாங்கம் கடந்து வந்த மூன்று தேர்தல்களிலும் அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் பல விடயங்களை செய்வதாக உறுதியளித்திருந்தார்கள். அதில் ஒன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவது. மற்றொன்று மக்களுடைய காணிகளை மக்களுக்கு உடனடியாக வழங்குவோம் என்பதாகும். அவற்றை நம்பித்தான் எங்களுடைய மக்களும் அரசாங்கத்திற்கு வாக்களித்தார்கள். ஆனால் எல்லாவற்றையும் நம்பி வாக்களித்த மக்களுக்கு இன்று வரை காணிகள் விடுவிக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டத்திலும் தண்ணிமுறிப்பு, ஆண்டாங்குளம் ஆகிய பகுதிகளிலிருந்து 1984ஃ12 இடம் பெயர்ந்த குடும்பங்களது காணிகளும் விடுவிக்கப்படவில்லை. 42 வருடங்களாக மீள குடியேற முடியாமல் துன்ப படுகின்றனர்.

இதே போன்றுதான் வலிவடக்கிலும் 36 வருடங்களுக்கு மேலாக காணிகள் விடுவிக்கப் படாமலிருக்கின்றன.

இந்நிலையில் மயிலிட்டி மக்களால் இன்று திங்கள்கிழமை யாழ். மாவட்ட செயலகத்திற்கு முன்னால் நடத்தப்படவிருக்கின்ற போராட்டத்திற்கு காணி உரிமைக்கான மக்கள் இயக்கம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதோடு மக்களின் நலன்களுக்காக போராடுகின்ற அனைத்து பொது அமைப்புகளும் இந்த மக்களின் காணிகள் விடுவிப்புக்கான போராட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கின்றோம்-என்றார். (அ)

# சிறப்புற நடைபெற்ற அளம்பில் அந்தோனியார் ஆலய திருவிழா!

முல்லைத்தீவு, ஜூன். 15

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்கு உட்பட்ட அளம்பில் புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று முன்தினம் மிக சிறப்பாக நடைபெற்றது.

திருவிழா திருப்பலி நேற்று முன் தினம் காலை யாழ்.மறைமாவட்ட மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி லியோ வின்சன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்றது.



திருவிழாவில் மறைக் கோட்ட குருக்கள்,, அருட்ச கோதரிகள், பக்தர்கள் பங்கேற்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# நேர்மை-உண்மை இல்லாத அரசாங்கம்

## சாடுகின்றார் நாமல் ராஜபக்ஷ

கொழும்பு, ஜூன். 15

அரசாங்கம் ஆட்சிக்கு வந்த போது மிகப்பெரிய எதிர்பார்ப்புகள் இருந்தன. ஆனால் எந்த ஒரு எதிர்பார்ப்பையும், நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் போனது. அதற்குப் பிரதான காரணம், அரசாங்கத்திடம் நேர்மையும் உண்மையும் இல்லை என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- சில விடயங்களை மூடி மறைக்கவேண்டும் என்பதற்காக, தங்களுக்குத் தாங்களே பொய் கூறும் நிலைக்கு இன்று இந்த அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் தள்ளப்பட்டுள்ளனர். தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கும் இந்த நாட்டுக்கும் துரோகம் இழைத்தவர்களாக இன்று அவர்கள் மாறியுள்ளனர்.

இன்று விவசாயத் துறையை முழுமையாக அழிக்கும் நிலைக்கு இந்த அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

ஒருபுறம், பிரத மரும் அரசாங்கத்தின் அமைச்சர்களும் கூறுகிறார்கள் "உணவுத் தட்டுப்பாடு வரப்போகிறது" என்று. ஆனால், உணவுத் தட்டுப்பாடு உலகளாவிய கால நிலை மாற்றத்தினால் ஏற்படுகிறது என்று அரசாங்கம் கூறிக் கொண்டே, மறுபுறம் உரத்தின் விலையை அதிகரித்து விவசாயிகளின் வயிற்றில் அடிக்கிறது.


விளைச்சலை அறுவடை செய்யும் காலம் நெருங்கும் போது, அரசாங்கத்தோடு தொடர்புடைய வர்த்தகர்கள் வெளிநாடுகளில் இருந்து காய்கறிகளை இறக்குமதி செய்கிறார்கள்.

இறுதியில் கிராமத்து விவசாயியின் விளைச்சலுக்கு விலை இல்லாமல் போகிறது. தங்களது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் ஒரு கொள்கை திட்டத்தையே இன்று அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது.

பட்டதாரி இளைஞர்களின் வேலைவாய்ப்பு பிரச்சினைக்கு என்ன நடந்தது? பட்டதாரிகள் வேலை கேட்டுப் போராடும் போது, அவர்களை அடித்து விரட்டும் அரசாங்கமாக இது மாறியுள்ளது.

உயர்தர மாணவர்களின் பரீட்சை சம்பந்தமாக ஒரு பிரச்னை உள்ளது. பாடத்திட்டங்கள் இன்னும் முழுமையாக கற்பித்து முடிக்கப்பட வில்லை. பாடத்திட்டம் முடிந்தாலும் முடியாவிட்டா லும், அரசாங்கத்திற்குத் தேவை பரீட்சையை நடத்துவது மட் டும்தான். இது தான் அரசாங்கத் தின் கொள்கை. மக்களின் கருத்துக்களைக் கேட்பதற்கு இங்கு யாரும் இல்லை.

அரசாங்கத்தில் உள்ளவர்கள் தவறான கணக்குகளுக்குப் பணத்தை அனுப்புவார்கள், ஆனால் அந்தப் கடனை மக்கள் செலுத்த வேண்டுமா? அந்த கடனையும், அந்தப் பாதிப்பையும் நாட்டின் மக்கள் சுமக்க



வேண்டுமா? வரிகளை அதிகரிக்க வேண்டுமா? எனவே, நாம் ஒரு சக்திவாய்ந்த அரசியல் சக்தியாக ஒன்றிணைவோம்.

அனைத்துக் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்ப டுத்துபவர் கள் இங்கு இருக்கிறார்கள். உங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கையையும், இந்த மண் ணின் மீது வைத்துள்ள நம்பிக் கையையும் நாம் பாதுகாப்பது மட்டுமல்லாமல், இந்தத் தாய் நாட்டின் மண்ணுக்குப் பொருத் தமான, இந்த மண்ணை நன்கு அறிந்த, உங்கள் இதயத் துடிப் பைப் புரிந்துகொண்ட ஓர் அரசியல் சக்தியாக இந்த அமைப்பை நாம் உருவாக்கு வோம்-என்றார்.

# மின்சாரம் தாக்கி 2 யானைகள் பலி!

கொழும்பு, ஜூன். 15

புத்தல - ஒக்கம்பிட்டிய பகுதியில் மின்சாரம் தாக்கியதில் இரண்டு காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன.

கரும்புச் தோட்டம் ஒன்றுக்கு சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கியே இந்த விலங்குகள் இரண்டும் உயிரிழந்திருக்கலாம் என வனவிலங்கு அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இவ்வாறு உயிரிழந்தவை சுமார் ஒரு வயது மற்றும் 20 வயது மதிக்கத்தக்க இரண்டு யானைகளாகும். இச்சம்பவம் தொடர்பாக சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உயிரிழந்த இரண்டு காட்டு யானைகளின் உடற்கூறாய்வு பரிசோதனை நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒக்கம்பிட்டிய பொலிஸ் நிலைய அதிகாரிகளும், மொனராகலை வன விலங்கு அலுவலக அதிகாரிகளும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# 5000 கலைஞர்கள் பங்கேற்ற பரத நாட்டிய உலக சாதனை கொழும்பில் அரங்கேறியது

கொழும்பு, ஜூன். 15

கொழும்பில் காலி முகத் திடலில் 5,000 கலைஞர்கள் பங்கேற்ற பரதநாட்டிய உலக சாதனை நிகழ்வு நேற்று அரங் கேறியது.

இந்தியாவைச் சேர்ந்த "சங்கமம் குளோபல் அக்கடமி" மற்றும் இலங்கையின் "சங்கதமிழ் லியா ஹொலிடேஸ்" ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்த மாபெரும் உலக சாதனை நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன. உலகின் மிகப்பெரிய பர தநாட்டியப் பயிற்சிக்கான கின் னஸ் உலகச் சாதனை முயற்சியாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் கலை, கலாசாரம் மற்றும் பாரம்பரியத்தை உலக அரங்கில் வெளிப்படுத்தும் நோக்கில் நடைபெற்ற இந் நிகழ்வு, உலகளாவிய தமிழ் கலைஞர்களின் ஒற்றுமையை எடுத்துக்காட்டும் முக்கிய நிகழ்வாகவும் கருதப்படுகிறது. (அ)

# சாலே உடல்நிலை குறித்து உடனடி கவனம் செலுத்துக!

## சர்வஜன அதிகாரம் அவசர கோரிக்கை

கொழும்பு, ஜூன். 15

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சுரேஷ் சாலேயின் உடல்நிலை குறித்து உடனடி கவனம் செலுத்துமாறு சர்வஜன அதிகாரம் கட்சி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில், சுரேஷ் சாலேயின் உடல் நிலை மோச மடைந்து வருவதாகக் கவலை வெளியிடப்பட்டுள்ளதுடன், மனிதாபிமான அடிப்படையிலும் சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்கும் நோக்கிலும் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரப்பட் டுள்ளது.

மேலும், தடுப்புக் காவலில் உள்ள நபரின் அடிப்படை மனித உரிமைகள் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வது அரசின் பொறுப்பு என்றும் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# குடிதண்ணீரில்லாது தவிக்கும் பள்ளவக்குளம் பிரதேச மக்கள்

திருமலை, ஜூன். 15

திருகோணமலை குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள பள்ளவக் குளம் மக்கள் குடிதண்ணீரின்றி தவிப்பதாக கவலை தெரிவிக்கின்றனர்.

2004 ஆம் ஆண்டு குடியேற்றப்பட்ட குறித்த பகுதி மக்கள் தற்போது வரை குடிதண்ணீரின்றியே வாழ்ந்து வருவதாக தெரிவித்தனர்.

குச்சவெளி பிரதேச சபை மூலமாக பவுசர் மூலமாக குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வந்த நிலையில் இரு மாதங்களாக அதுவும் இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அப் பகுதி சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிக்கின்றனர். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு



# கூட்டு எதிரணியால் மட்டுமே இந்த நாட்டை மீட்க முடியும்!

## அநுராத ஜயரத்ன எம்.பி. கூறுகிறார்

கொழும்பு, ஜூன். 15

“வீழ்ச்சியடையும் நாட்டை இந்த குழுவே (கூட்டு எதிரணி) மீள கட்டியெழுப்பி சரியான திசைக்கு கொண்டுவரும்.” என்று பாராளுமன்ற உறுப்பினர் அநுராத ஜயரத்ன தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டு எதிரணி கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

“டித்வா சூறாவளி வந்து பல மாதங்கள் கடந்துவிட்டன. ஆனால் கொழும்பில் இருந்து இன்னும் கண்டிக்கு ரயிலில் வரமுடியவில்லை. கம்பளையில் உள்ளவர்களுக்கு கண்டிக்கு செல்ல முடியவில்லை. குறுகிய தூரத்தைக்கூட இவர்களால் புனரமைக்க முடியாதுள்ளது. இப்படியானவர்கள்தான் நாட்டை கட்டியெழுப்புவது பற்றி கதைக்கின்றனர்.

யார் எப்படியான கதைகளைக் கூறினாலும், இந்நாட்டை சரியான திசைக்கு கொண்டு செல்வதற்குரிய இயலுமை மிக்கவர்கள் கூட்டு எதிரணி பக்கம்தான் உள்ளனர்.

இந்நாட்டுக்காக சேவை செய்தவர்களே இன்று இந்த மேடையில் இருக்கின்றனர். நாட்டுக்காகவே கூட்டு எதிரணியாக செயல்படுகின்றோம்.

சரியான முடிவை எடுப்போம், இல்லையேல் சிக்கலில் மாட்ட வேண்டிவரும் என நாம் 2024 ஆம் ஆண்டிலேயே சுட்டிக்காட்டினோம். இன்று அவ்வாறு நடக்கின்றது.

எம்மிடையே தலைமைத்துவ பிரச்சினை கிடையாது. நாட்டுக்கான பொது மேடையே இது. இணைந்து அரசியல் பயணத்தை முன்னெடுப்பதற்கான களம்.

வீழ்ச்சியடையும் நாட்டை இந்த குழுவே மீள கட்டியெழுப்பும் என்ற உறுதிமொழியை வழங்குகின்றேன்-என்றார்.

(அ)

# சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இந்த வாரத்தில்!

கொழும்பு, ஜூன். 15

கடந்த 2025 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை முடிவுகள் இந்த வாரத்தில் வெளியிடப்படும் என கல்வி பிரதி அமைச்சர் கலாநிதி மதுர செனவிரத்ன அறிவித்துள்ளார்.

பரீட்சார்த்திகளின் விபரங்களை இணையவழியில் புதுப்பிக்கும் இறுதிக்கட்ட பணிகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை நடைபெற்ற இப்பரீட்சையில் நாடு முழுவதிலும் இருந்து மொத்தம் 4 இலட்சத்து 51 ஆயிரத்து 463 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இதேவேளை, 2026 ஆம் ஆண்டுக்கான சாதாரண தர மற்றும் உயர் தரப் பரீட்சைகளுக்கான பாடத்திட்டங்களை எவ்வித தாமதமுமின்றி உரிய காலத்திற்குள் நிறைவு செய்யுமாறு கல்வி அமைச்சு அனைத்துப் பாடசாலைகளுக்கும் அவசர உத்தரவு பிறப்பித்துள்ளது.

அனைத்து அரச மற்றும் தனியார் பாடசாலை அதிபர்களுக்கு கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவெள விடுத்துள்ள அறிவித்தலில், பாடத் திட்டங்களை மூடிமறைப்பதில் ஏதேனும் தாமதங்கள் காணப்பட்டால், மேலதிக நேரங்களை ஒதுக்கியாவது முன்கூட்டிய திட்டமிடலின்படி அதனை முடிக்குமாறு அறிவுறுத்தியுள்ளார்.

(அ)

# குச்சவெளி பழைய பொலிஸ் வளாகத்தில் இரும்பு திருட்டு!

## தொல்பொருள் திணைக்கள ஊழியர்கள் இருவர் உட்பட நால்வர் பட்டாடன் கைது

திருமலை, ஜூன். 15

திருகோணமலை, குச்சவெளி பகுதியில் அமைந்துள்ள பழைய பொலிஸ் நிலைய வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்து, அங்கிருந்த இரும்புகளைத் திருடிய குற்றச்சாட்டின் கீழ் நான்கு சந்தேக நபர்கள் பட்டா லொறி ஒன்றுடன் கைது செய்யப்பட் டுள்ளதாக குச்சவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் இருவர் தொல்பொருள் திணைக்களத்தில் தற்காலிகமாக கடமையாற்றி வரும் ஊழியர்கள் என முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குச்சவெளி பழைய பொலிஸ் நிலையக் கட்டிடப் பகுதியில் நீண்ட நாள்களாகப் பயன்படுத்தப்படாமல் இருந்த இரும்புப் பொருள்களை, நேற்று முன் தினம் சிலர் திருட்டுத்தனமாக பட்டா லொறி ஒன்றில் ஏற்றிக் கொண்டிருப்பதாக பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில், சம்பவ இடத்திற்கு விரைந்த குச்சவெளி பொலிஸ் குழுவினர், திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நான்கு பேரையும் கையும் மெய்யுமாக மடக்கிப் பிடித்ததுடன், திருடப்பட்ட இரும்புப் பொருள்கள் மற்றும் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட பட்டா லொறியையும் கைப் பற்றினர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் திருகோணமலை மற்றும் குச்சவெளிப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் இருவர் தொல்பொருள் திணைக்களத்தில் பணிபுரிபவர்கள் என்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கடல்சார் பாரம்பரியம் குறித்த புதிய ஆய்வு நூல் கடற்படையால் வெளியீடு

கொழும்பு, ஜூன். 15

இலங்கை கடற்படையின் ஆராய்ச்சிப் பிரிவால் தொகுக்கப்பட்ட புதிய ஆய்வு நூல் வெளியீட்டு விழா கடந்த 12ஆம் திகதி கடற்படை தலைமையகத்தில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு பிரதி பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அருண ஜயசேகர (ஓய்வு) தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் உரையாற்றிய கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் காஞ்சன பானகொட, இந்த நூல் பல்வேறு கல்வி நிறுவனங்கள் மற்றும் அறிஞர்களின் கூட்டு பங்களிப்பில் உருவாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.




மேலும், இலங்கையின் கடல்சார் வரலாறு, தொல்லியல் மற்றும் வர்த்தகப் பாரம்பரியம் உள்ளிட்ட துறைகளை உள்ளடக்கிய இந்த நூல், தேசிய அளவில் முக்கியமான ஆய்வு வளமாக இருக்கும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# இலங்கைக்கு நாடு கடத்தப்பட்ட இரு பாதாள குழு உறுப்பினர்கள்

கொழும்பு, ஜூன். 15

இலங்கையில் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய முக்கிய பாதாள உலகக் குழு உறுப்பினர் கள் இருவர் ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்து நேற்று முன் தினம் இரவு நாடு கடத்தப்பட் டனர்.

பிரபல பாதாள உலகக் குழு உறுப்பினரான “மோதர நிபுண“ என்பவரின் சகோதரர் மற்றும் “புளூமெண்டல் சங்கா“ ஆகிய இருவருமே இவ்வாறு இலங் கைக்கு அழைத்து வரப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய இந்த சந்தேக நபர்கள் இருவரும், சட்ட அமுலாக்கப் பிரிவினரிடமிருந்து தப்பிப்பதற்காக அபுதாபியில் மறைந்து வாழ்ந்து வந்தனர்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர்ச் சூழலுக்கு மத்தியில், ஈரான் நடத்திய தாக்குதல்களுக்குப் பயன்படுத்தப்பட்ட ட்ரோன் விமானங்கள் மற்றும் ஏவுகணைகளின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகளைத் தங்களது கைபேசிகளில் வைத்திருந்த குற்றத்திற்காக அபுதாபி பாதுகாப்புப் பிரிவினரால் இவர்கள் அண்மையில் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்தே அவர்கள் இலங்கைக்கு நாடு கடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த சந்தேகநபர்கள் இருவரையும் விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் உடனடியாகக் கைது செய்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தினர். (அ)

# இரு இடங்களில் பெருந்தொகை கஞ்சாச் செடிகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன். 15

இலங்கை இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பேரில், ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகல பகுதிகளில் பொலிஸ் விசேட அதிரடிப் படை மற்றும் பொலிஸ் பிரிவுகள் இணைந்து மேற் கொண்ட கூட்டு நடவடிக்கை களில் பெரும் தொகையான கஞ்சா செடிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.

தனமல்வில பகுதியில் சுமார் இரண்டரை ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 19,800 கஞ்சா செடிகளும், ஹம்பெகமுவ, உனகந்த, அலிவல பகுதிகளில் சுமார் 1ஃ4 ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்த 23,250 கஞ்சா செடிகளும் பறிமுதல் செய்யப்பட்டு, சம் பவ இடத்திலேயே அழிக்கப்பட் டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவத்துடன்தொடர்புடைய ஒருவர் கைது செய்யப்பட்டு ஹம்பெகமுவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப் பட்டு ள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பொருளாதார நெருக்கடி நிலையை மறைக்கவே “சாலே“ விவகார நாடகம்!

திருமலை, ஜூன். 15

நாட்டின் தற்போதைய பிரதான பிரச்னையாக பொருளாதார நெருக்கடி உருவெடுத் துள்ள நிலையில், அதனை மூடிமறைப்பதற்காக அரசாங்கமும் ராஜபக்ஷ தரப்பினரும் இணைந்து அரங்கேற்றும் ஒரு கூட்டு நாடகமாகவே ‘சாலே’ விவகாரத்தை நான் பார்க்கிறேன் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-உயிர்த்த ஞாயிறு தாக்குதல், இலங்கையின் பொருளா தார வீழ்ச்சிக்கு இடப்பட்ட அடித்தளமாகும். அரசியல் இலாபத்திற்காக நடத்தப்பட் டதாக பல்வேறு விசாரணைக ளின் மூலம் தெரியவரும் இந்த பயங்கரவாதத் தாக்குதலால், முதலாவதாகப் பயனடைந்த வர்கள் ராஜபக்ஷக்களும் பொது ஜன பெரமுனவினருமாவர். அதன் பின்னரான சூழலில், இந்த விடயத்தை மையப்படுத்தி அதி காரத்திற்கு வந்தவர்கள் தேசிய மக்கள் சக்தியினராவர்.

இந்தத் தாக்குதலினால் நாம் மூன்று விதமான பெரும் சவால்களைச் சந்தித்தோம். முதலாவதாக, அரசியல் சதித் திட்டங்களால் அரங்கேற்றப்பட்ட இந்த பயங்கரவாதத் தாக்குதலில் பல அப்பாவி உயிர்கள் பலிகொள்ளப்பட்டன. இரண்டாவதாக, முஸ்லிம் சமூகமாகிய நாம் பல்வேறு சவால்களுக்கும், அபாண்டமான பழி சுமத்தல்களுக்கும் முகங்கொடுக்க நேரிட்டது. இந்தத் தாக்குதலினால் எம் மீது பழி சுமத்தப்பட்டாலும், உண்மையான சூத்திரதாரிகள் யாரென்பதை வெளிப்படுத்த வேண்டியதன் அவசியத்தை நாம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம். இன்று நாட்டின் பொருளாதார பிரச்னை தலை தூக்கியிருக்கும் சூழலில், அதனை மூடி மறைப்பதற்காகவே இந்த அரசாங்கம் ‘சாலே’ விவகா ரத்தை ஒரு பிரதான கதாநாயகனாக்கி அரசியல் இலாபமடைந்து வருகிறது.

எமக்கு நாட்டின் பொருளாதார மீட்சியும் அவசியம், அதேபோல் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதியும் வேண்டும். இதுவே ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பாகவும் உள்ளது-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## செம்மணி புதைகுழியில்...

காணப்பட்ட என்புக்கூடுகளில் ஒரு குழந்தை, நான்கு சிறுவர்களின் என்புக்கூடுகள் உட்பட 07 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன. புதிதாக மேலும் இரண்டு என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இதுவரையிலான அகழ்வு பணிகளின்போது, 355 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 341 என்புக் கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

(அ)

## கோப்பாய் பொலிஸார்...

வழக்கு விசாரணைகள் 06 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில் கடந்த 2025ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் திகதி பொலிஸார் தனியார் காணிகள், வீடுகளை உரிமையாளர்களிடம் மீள ஒப்படைத்துவிட்டு, வெளியேறவேண்டும் என தீர்ப்பளிக்கப்பட்டது.

இதனை அடுத்து கடந்த ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி பொலிஸ் நிலையம் இயங்கிய வீடுகளை தவிர, பொலிஸாரின் தங்குமிடம், மைதானமாக இருந்த காணிகள், வீடுகளை விட்டு பொலிஸார் வெளியேறினர்.

இந்நிலையில் பழைய பொலிஸ் நிலையம் அமைந்திருந்த பகுதியில் இருந்து இராச பாதையில் சுமார் 2 கிலோ மீற்றர் தூரத்தில், புதிய பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இதனை அடுத்து, இதுவரை பொலிஸ் நிலையம் இயங்கி வந்த காணிகள் மற்றும் வீடுகளை விட்டு பொலிஸார் முற்றாக வெளியேறியுள்ளனர்.

(அ)

## ஈஸ்டர் தாக்குதல்...

திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வீதி அபிவிருத்தித் திட்டங்களைத் திறந்து வைத்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் அரச புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) சுரேஷ் சாலே தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறித்து குற்றச்சாட்டுகளை முன்வைப்பவர்கள், தங்களின் ஆதாரங்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து, சட்டபூர்வ வழிகளின் மூலம் நீதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

"அவர்களிடம் ஆதாரங்கள் இருந்தால், அவற்றை நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்க வேண்டும். உண்மைகள் சமர்ப்பிக்கப்பட்டவுடன், அதற்கான காரணங்களை நீதிமன்றமே விளக்கும்," என்று அவர் தெரிவித்தார்.

சுரேஷ் சாலேயுக்கு நீதி கோரி தொடர் உண்ணாவிரதமாகத் ஆரம்பிக்கப்பட்ட தற்போதைய போராட்டங்கள் குறித்து கருத்துத் தெரிவித்த அவர், இந்த இயக்கம் உண்மைகளின் அடிப்படையில் அமையாததால் தற்போது சிதறடிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

"தாங்கள் கூறுவது பொய் என்பது அவர்களுக்கே தெரியும். அதனால்தான் அவர்களால் இந்த இயக்கத்தை ஒரே மாதிரியாகத் தொடர்ந்து கொண்டு செல்ல முடியாமல், தற்போது பொதுமக்களின் ஆதரவைத் திரட்ட முயல்கிறார்கள்," என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்தான விசாரணைகள் முறையாக முன்னோக்கி நகர்ந்து வருவதாகவும், இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் உட்பட பொறுப்பானவர்களை அடையாளம் காணும் பணிகளை அதிகாரிகள் தொடர்ந்து மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரசியல்வாதிகளான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில மற்றும் திலித் ஜயவீர உள்ளிட்ட ஒரு சிறிய குழுவினர், தற்போதைய விசாரணைச் செயல்முறைகளின் போது சுரேஷ் சாலேயுக்கு நீதி கோருவதாகக் கூறி பிரசாரம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

நீதிமன்றச் செயல்முறைகளுக்கு இடையூறு விளைவித்த பல நபர்களுக்கு எதிராக "நீதிமன்ற அவமதிப்பு" உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் ஏற்கனவே நீதிமன்ற அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளதாகவும், விசாரணை மற்றும் தாக்குதல்கள் குறித்து அவர்கள் வெளியிட்ட அறிக்கைகளுக்கு நீதிமன்றத்தில் பதிலளிக்க வேண்டியிருக்கும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

## ரெலோவின் தேசிய...

முக்கியஸ்தர்கள் பலர் கலந்துகொள்ளவில்லை.

ரெலோ முன்னாள் உப தலைவர் ஹென்றி மகேந்திரன், பிரசன்னா இந்திரகுமார், சபா குகதாஸ், வினோ நோகராதலிங்கம், புவனேஸ்வரன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் நேற்றைய கூட்டத்தை புறக்கணித்தனர்.

குறித்த தரப்பினர் கட்சியின் தலைமை சுயநலமாகச் செயற்பட்டு வருவதுடன், கட்சியின் வீழ்ச்சிக்கும் காரணமாக உள்ளதாக பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# மகிந்த கேட்டவுடன் ஆட்சியை நாம் தூக்கி கொடுக்கமுடியாது!

### இளங்குமரன் எம்.பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன். 15

மக்களின் வாக்குகளால் மீண்டும் ஆட்சிக்கு வர முடியாது எனத் தெரிந்து, தேசிய மக்கள் சக்தியிடம் ஆட்சியை தா என மகிந்த தரப்பு கேட்டு நிற்கிறது. அவர்கள் கேட்பதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரங்களை அவர்களிடம் கையளிக்காது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் நிலைய திறப்பு விழாவில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினரிடம், களுத்துறையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் மகிந்த தெரிவித்த கருத்து தொடர்பில் கேட்ட போதே அவ்வாறு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டை தங்களிடம் தருமாறு மகிந்த தரப்பு கோரியுள்ளது. இந்த அரசாங்கம், நாட்டு மக்கள் வாக்களித்து ஜனநாயக ரீதியாக அமைந்த அரசாங்கம். அவர்கள் இனித் தேர்தலில் வெல்ல முடியாது எனத் தெரிந்து கொண்டு எம்மிடம் ஆட்சியை கேட்கின்றார்கள்.

எங்கள் அரசாங்கம் ஊழல்வாதிகளை தண்டிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், புதிய அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்து வருகிறது.

மக்களின் பணத்தைச் சூறையாடியவர்கள், ஆட்சிக்காக பல கொலைகளைச் செய்தவர்கள், இன்று மக்கள் மத்தியில் அம்பலப்பட்டு வருகின்றனர். அதனால் அவர்கள் மீண்டும் மக்கள் வாக்குகளால் ஆட்சிக்கு வர முடியாது. அதனால் எம்மிடம் ஆட்சி அதிகாரங்களை தாருங்கள் எனக் கேட்டு நிற்கின்றனர்.

அவர்கள் கேட்பதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தி ஆட்சி அதிகாரங்களை அவர்களிடம் கையளிக்கமாட்டாது. மக்கள் இந்த ஆட்சியை விரும்புகின்றனர். எதிர்வரும் காலங்களிலும் தேசிய மக்கள் சக்தியே மக்களால் தெரிவு செய்யப்பட்ட கட்சியாக தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கும் - என்றார். (அ)

## செம்மணியைப் பார்வையிட...

பின்னணியில் கொழும்பில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் பிரதிநிதிகள் எதிர்வரும் ஜூலை மாத முற்பகுதியில் நீதிமன்ற அனுமதியுடன் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப் பணிகளை பார்வையிடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.

(அ)

## பயங்கரவாதத் தடுப்பு...

சிவில் சமூகத்தின் பரிந்துரைகளை உள்ளடக்கி, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களுக்கான அனைத்துலக கட்டமைப்புகளுக்கு இணங்கும் இந்த சட்டமூலத்திற்கு, பயங்கரவாத தடுப்புக்கான அரச சட்டம் எனப் பெயரிடப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டமூலம் இறுதி செய்யப்பட்டு விட்டதாகவும், முதலில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அரசிதழில் வெளியிடப்பட்டு, பின்னர் பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்றும், அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இரண்டு மாதங்களுக்குள் இந்தச் சட்டத்தை நிறைவேற்றத் திட்டமிட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்வது குறித்து ஆய்வு செய்து பரிந்துரைகளை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் சில பரிந்துரைகளை இந்த சட்டவரைவு உள்ளடக்கியுள்ளது.

ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர் ரியன்சி அரசகுலரத்ன தலைமையிலான இந்தக் குழு, பரந்த மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சீர்திருத்தச் செயல்முறையை உறுதி செய்வதற்காக, பொதுமக்களின் கருத்துக்களைக் கோரியதுடன், சிவில் சமூக அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகளிடமிருந்தும் உள்ளீடுகளைப் பெற்றது.

இந்த வரைவு, தொடர்புடைய ஐ.நாவின் முகமைகளுடனும், ஐ.நாவின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க் அன்ட்ரே பிரெஞ்சுடனும் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு என்ன நடக்கும் என்பது குறித்து தீர்க்கப்பட வேண்டிய சில சிக்கல்கள் உள்ளன.

இது தொடர்பாக மேலும் தெளிவு தேவைப்படுகிறது, இது விரைவில் தீர்க்கப்படும் என்றும் அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டார்.

(அ)

## ரெலோ தலைவராக...

வவுனியா குருமன்காட்டில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

இதன்போது இயக்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்றது. கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். செயலாளராக கோவிந்தம் கருணாகரனும்(ஜனா), உபதலைவராக சுரேன் குருசாமியும், நிதிச் செயலாளராக க.விஜிந்தனும், நிர்வாகச் செயலாளராக நித்தியானந்தனும், இளைஞரணி செயலாளராக பிரபாகரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து தலைமைக் குழு மற்றும் மத்திய குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(அ)

## சிறுபான்மை கட்சிகள்...

முற்போக்குக் கூட்டணி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் ஆகிய தரப்புக்களின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் முதலாவது உரையாடலொன்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.

இதன்போது ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அண்மைக் காலச் செயற்பாடுகள் மற்றும் அவர்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் காலங்கடத்தும் செயற்பாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்தன.

அதனடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஜனாதிபதி தேர்தலின்போதும், பின்னர் பாராளுமன்ற தேர்தலின்போதும் வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாத நிலையில் நீடிக்கின்றவற்றை கோடிட்டுக் காண்பித்து மகஜரொன்றையும் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதற்கான வரைவு தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த வரைவு எதிர்வரும் வாரமளவில் இறுதிசெய்யப்பட்டு அடுத்த பாராளுமன்ற காலப்பகுதியில் ஜனாதிபதி அநுரகுமாரவைச் சந்திப்பது இலக்காகவுள்ளது.

இதேநேரம், குறித்த கலந்துரையாடலில் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியையும் உள்ளீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்பட்டுள்ளன.

(அ)

## கோப்பாய் பொலிஸ்...

ஆனந்த விஜேபால மற்றும் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய ஆகியோரின் பங்கேற்புடன் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் விருந்தினர்கள் அழைத்து வரப்பட்டதனை தொடர்ந்து கொடியேற்றல் வைபவம் இடம்பெற்றது.

பின்னர் சம்பிரதாய பூர்வமாக பொலிஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டு, விருந்தினர்களின் உரைகள், கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து இதுவரை காலமும் கோப்பாய் பொலிஸ் நிலையம் இயங்கி தனியார் காணிகளின் உரிமையாளர்களிடம் அவர்களது கட்டடங்களின் திறப்புகள் உத்தியோகபூர்வமாக வழங்கப்பட்டன.

நேற்றைய நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், சிறீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன் மற்றும் வடக்கு மாகாண சிரேஸ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், வடக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி, பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு

# தேசிய மக்கள் சக்தியை ஆதரித்திருந்தால் சாலேயுக்கு உயர்ந்த பதவி கிடைத்திருக்கும்

## சாமர சம்பத் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 15

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் மேடையில் ஏறி அரசியல் பிரசாரம் செய்திருந்தால் இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்திருப்பார் என புதிய ஜனநாயக முன்னணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தெரிவித்தார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

30 வருடகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷ மீதும், கடந்த கால அரசாங்கங்கள் மீதும் போலியான பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. 75 ஆண்டுகால அரசியல் கட்டமைப்பும் சாபம் என்றே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

போலியான வாக்குறுதிகள் மற்றும் குற்றச்சாட்டுக்களுக்கு ஏமாற்றமடைந்து மக்கள் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள். அதன் பயனை மக்கள் இன்று நன்கு அனுபவிக்கிறார்கள். அரசியல் ரீதியில் தாம் ஏமாற்றமடைந்ததை மக்கள் தற்போது விளங்கிக்கொண்டுள்ளார்கள்.

அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளை சுட்டிக்காட்டும் போது அரசாங்கத்தால் அதனை தாங்கிக் கொள்ள முடியவில்லை. எதிர்க்கட்சிகளை பழிவாங்குவதற்காக கடந்தகால வழக்குகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. எதிர்வரும் 17 ஆம் திகதி எனக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. சகல சவால்களையும் நான் எதிர்கொள்வேன்.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே விவகாரம் தற்போது பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பிரதானி சுரேஷ் சாலே தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் மேடையில் ஏறி அரசியல் பிரசாரம் செய்திருந்தால் இன்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக பதவி வகித்திருப்பார்.

சானி அபேசேகர, ரவி செனவிரத்ன ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பக்கம் வந்தார்கள். அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதன் பின்னர் பேராயர் கர்தினாலிடம் சென்றார்கள். அவரின் ஆலோசனையின் பின்னரே தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்தார்கள்.

குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற போது சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் பதவியில் இருந்தார்கள். அவர்கள் கடமையை சரிவர செய்யவில்லை என்று விசாரணை அறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆனால் அவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. அவர்கள் பாதுகாக்கப்படுகிறார்கள்-என்றார். (அ)

## வைரஸ் நோய்த்தாக்கம் அதிகரிப்பு;

# வைத்தியசாலைகளில் குவியும் நோயாளர்கள்!

கொழும்பு, ஜூன். 15

டெங்கு உள்ளிட்ட வைரஸ் நோய்த்தாக்கங்கள் காரணமாக நாட்டின் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போதைய நிலையில் பல வைத்தியசாலைகளில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன், விடுதிகளில் நோயாளர்களின் நெரிசலும் அதிகரித்துள்ளதாக கூறப்படுகிறது.

நிலைமை மேலும் தீவிரமடைந்தால், சுகாதார அமைப்பு மீது கூடுதல் அழுத்தம் ஏற்பட்டு கட்டுப்படுத்த முடியாத நிலை உருவாகக்கூடும் எனவும் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (அ)

# ரெலோவின் தலைமைக்கு எதிராக மூத்த உறுப்பினர்கள் போர்க்கொடி!

யாழ்ப்பாணம், ஜூன். 15

ரெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) அமைப்பின் தலைமைக்கு எதிராகப் பல மூத்த போராளிகள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டு வரும் நிலையில், கட்சியின் தேசிய மாநாட்டை இரகசியமாக நடத்தித் தங்களது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளத் தலைமைப்பீடம் ஜனநாயக விரோத நகர்வுகளை மேற்கொண்டுள்ளது என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்-

கட்சித் தலைமையின் தன்னிச்சையான அரசியல் தீர்மானங்கள், நிரவாகச் சீர்கேடு, தொடர்ச்சியான தேர்தல் தோல்விகள் மற்றும் தவறான கூட்டணிகள் காரணமாகக் கட்சி கடுமையான பின்னடைவைச் சந்தித்துள்ளதுடன், மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துள்ளது. இதனால் உறுப்பினர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டு பலர் கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர். கட்சியின் நீண்ட வரலாற்றில், போராளிகளும் அங்கத்தவர்களும் தலைமைக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடும் துரதிர்ஷ்டமான நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 21 அன்று வவுனியாவிலும், ஏப்ரல் 25 அன்று திருகோணமலையிலும் நடைபெற்ற தலைமைக் குழுக் கூட்டங்களில், எமது கடும் எதிர்ப்பையும் மீறித் தங்களது பதவிகள் பறிபோய்விடும் என்ற பீதியில் மாநாட்டைப் பிற்போடக் கட்சியின் தலைமைப்பீடத்தினர் தீர்மானித்தனர். அத்துடன், ஏற்கனவே எட்டு மாவட்டங்களில் முறையாக நடத்தப்பட்ட தெரிவுகளை இரத்துச் செய்து, புதிதாகப் பொதுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க முடிவெடுத்தனர். இது கட்சி யாப்புக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணானதாகும்.

அண்மைக் காலமாகக் கட்சி பலத்த பின்னடைவுகளைச் சந்தித்தமைக்குக் கட்சித் தலைவரின் சுய ஒழுக்கம் சார்ந்த பிரச்னையே மூலகாரணமாகும். கட்சியின் முன்னாள் பெண் உறுப்பினர் ஒருவருடன் அவர் கொண்டிருந்த பாலியல் ரீதியான தகாத உறவுச் செய்திகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி கட்சிக்கு அவமானத்தை ஏற்படுத்தின.

முன்னதாக, இந்த விடயம் தொடர்பில் கட்சியின் உப தலைவருடன் பேசிய தலைவர் தன் தவறை ஏற்றுக்கொண்டதுடன், தான் எதிர்காலத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை எனத் தலைமைக் குழுவிலும் உறுதியளித்திருந்தார். ஆனால், தற்போது மீண்டும் பதவியைத் தக்கவைக்கத் தலைவரும் செயலாளரும் எடுக்கும் முயற்சிகளினாலேயே கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன - என்றனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ரெலோ கட்சியின் தலைமைக் குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட செயலாளருமான சபா குகதாஸ், தலைமைக் குழு உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். வினோ நோகராதலிங்கம், கட்சியின் தேசிய அமைப்பாளர் பிரசன்னா இந்திரகுமார், உப தலைவர் ஹென்றி மகேந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 8 நாள்களாக ஒரு துளி தண்ணீர்கூட இல்லை!

## சாலேயின் மனைவி கவலை

கொழும்பு, ஜூன். 15

சுரேஷ் சலேவுக்கு, தற்போது படுக்கையில் உட்கார்ந்திருக்கக்கூட சக்தி இல்லை. அவருக்கு காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. தொற்றுநோயும் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். சுமார் 8 நாள்களாக அவர் ஒரு துளி தண்ணீர்கூட அருந்தவில்லையென அவரது மனைவி கவலை வெளியிட்டுள்ளார்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு தற்போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சுரேஷ் சாலேயை அவரது மனைவியும் மகனும் பார்வையிட்ட பின்னர் சாலேயின் மனைவி ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சுரேஷின் உடல்நிலை மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ளது. முன்னர் படுக்கையில் உட்கார்ந்தபடியேனும் பேசிக்கொண்டிருந்தார். ஆனால் தற்போது படுக்கையில் உட்கார்ந்திருக்கக்கூட அவருக்கு சக்தி இல்லை.

அவரது இரண்டு கைகளும் வீங்கியுள்ளன. தொடர்ச்சியான மருத்துவ சிகிச்சைகள் காரணமாக உடல் மிகவும் பலவீனமடைந்துள்ளது. பேசுவதற்குக்கூட பெரும் முயற்சி எடுக்கவேண்டிய நிலை காணப்படுகிறது. வார்த்தைகளை உச்சரிப்பதற்கே சிரமப்படுகிறார்.

நாளுக்கு நாள் அவரது உடல்நிலை மேலும் மோசமடைந்து வருவதாகவே தெரிகிறது. இருப்பினும் மருத்துவர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றனர். அவர்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன்.

இங்கு பணியாற்றும் அனைத்து மருத்துவர்களும் அவரை கருணையுடனும் அக்கறையுடனும் கவனித்து வருகின்றனர். அவரைக் காப்பாற்றுவதற்கு தேவையான அனைத்தையும் அவர்கள் செய்து வருகின்றனர்.

ஆனால் சுரேஷின் தற்போதைய நிலைமை மிகவும் கவலைக்கிடமானதாகவே உள்ளது. இன்று வரை சுமார் 8 நாள்களாக அவர் ஒரு துளி தண்ணீர்கூட அருந்தவில்லை. எந்தவித உணவையும் உட்கொள்ளவில்லை. தற்போதும் அவர் அதனைத் தொடர்ந்து மறுத்து வருகிறார்.

இந்த நிலைமை தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும். சுரேஷ் உயிரிழக்கும் வரை காத்திருந்து பார்ப்பது ஏற்றுக்கொள்ள முடியாதவொன்று-என்றார். (அ)

# பாடசாலை செல்லாத மாணவர்கள் கல்வி அமைச்சே முழுப் பொறுப்பு!

## ஜோசப் ஸ்டாலின் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன். 15

பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதற்கு கல்வி அமைச்சே பெரும் பொறுப்பேற்க வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

பல்வேறு தேவைகள் மற்றும் செயற்பாடுகளுக்காக பாடசாலைகள் மூலம் வசூலிக்கப்படும் பணம் பெற்றோருக்கு பெரும் சுமையாக மாறியுள்ளதுடன், இது மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தருவது குறைவதற்குக் காரணியாக அமைந்துள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

பல பெற்றோரால் பாடசாலைகள் கோரும் செலவுகளைத் தாங்கிக்கொள்ள முடிவதில்லை என்றும், அதேநேரம் தனியார் மேலதிக வகுப்புக்களின் விரைவான பரவல் மாணவர்கள் மற்றும் குடும்பங்களுக்கு மேலும் சிரமங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

“அரசாங்கம் இந்த பிரச்னைகளுக்கு தீர்வு காணத் தவறிவிட்டது. மாணவர்கள் ஏன் பாடசாலைக்கு வரவில்லை என்பதை கண்டறிந்து, அந்த பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காண பாடசாலைகளும் கல்வி அமைச்சும் இணைந்து செயற்பட வேண்டும்,” என அவர் கூறினார்.

கல்வி நிர்வாகத்தில் எடுக்கப்படும் தன்னிச்சையான முடிவுகளும் தோல்விகளுமே நாட்டின் கல்வி முறை வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணங்களாக அமைந்துள்ளன என்றும் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக்காட்டினார். (அ)

# டெங்கு ஒழிப்பு வாரம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 15

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதைக் கருத்திற்கொண்டு, இன்று முதல் நாடு தழுவிய ரீதியில் விசேட டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது இடங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை மையமாகக் கொண்டு முன்னெடுக்கப்படவுள்ள இந்த விசேட தூய்மையாக்கல் வேலைத்திட்டம், ஜூன் மாதம் 20ஆம் திகதி வரை தொடரவுள்ளது.

அதனைத் தொடர்ந்து, ஜூன் 18ஆம் திகதி கல்வி நிறுவனங்களில் நுளம்பு பெருகும் இடங்களை அழிக்கும் விசேட வேலைத்திட்டமும், ஜூன் 19ஆம் திகதி அனைத்து அரச மற்றும் தனியார் நிறுவனங்களைச் சுற்றியுள்ள வளாகங்களைத் தூய்மைப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த வேலைத்திட்டத்தின் இறுதி நாளான ஜூன் 20ஆம் திகதியன்று, பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் அதனைச் சுற்றியுள்ள சூழலைத் தூய்மைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன.

நாட்டில் அதிகரித்து வரும் டெங்கு அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் இந்த தேசிய வேலைத்திட்டத்திற்குப் பொதுமக்கள் மற்றும் அனைத்துத் தரப்பினரையும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கேட்டுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media